# தூத்துக்குடி நகரமன்றம்

## அவசரக் கூட்டப்பொருள்

2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10. 30 மணிக்கு தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ் பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. நகர வளர்ச்சிப் பணியில் அக்கறை கொண்ட தூத்துக்குடி நகராட்சி மக்கள் பிரதிநிதிகள் 13–4–2007ம் தேதிய விண்ணப்பத்தில் தூத்துக்குடி நகரில் கடல் மட்டம் நிலமட்டத்தை விட தாழ்வானது என்றும், நிலத்தடி நீரின் மட்டம் குறைவதால் நிலத்தடி நீர் கடல் நீராகும் (உப்பு) என்றும், நிலத்தடி நீர் மட்டம் குறைவதன் மூலம் நில அதிர்வு நிலப்பரப்பு விரிவடைதல் காரணமாக பூமி அதிர்ச்சி ஏற்படும் என்றும், இதனால் குடியிருப்பு கட்டிடங்கள், தொழிற்சாலை கட்டிடங்கள் மற்றும் அரசு கட்டிடங்கள் பாதிப்பு அடைவதன் காரணமாக மக்கள் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்றும், குடிநீர் மற்றும் நிலத்தடி நீரின் முக்கியத்தை கருத்தில் கொண்டு நகர எல்கைக்குள் நிலத்தடி நீர் விற்பனை செய்வதை தடுக்க நகராட்சியில் தீர்மானமாக நிறைவேற்றி நடவடிக்கை எடுக்கக் கோரி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கோரிக்கை மன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

குறிப்பு நகர எல்கைக்குள் ஆழ்துளை குழாய் அமைத்து நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்து நிலத்தடி நீர் விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கலாம்.

இ3. 6631/07

2. நகரமன்றத் தீர்மானம் எண் 11 நாள் 25–1–2007ல் கண்டுள்ள தீர்மானப்படி குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு குடிநீர்க் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது தொடர்பான அறிவிப்பு தினசரியில் பிரசுரம் செய்யவும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அது வகைக்கு ஆகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு மன்றம் அனுமதி வழஙகலாம்.

இ3. 467/06

3. இந்நகராட்சிக்கு சொந்தமான 19வது வார்டு மரக்குடி தெரு, பிரமுத்து சந்து, செயிண்ட் பீட்டர்கோவில் தெரு குருசடி சந்து ஆகிய தெருக்களிலுள்ள மழைநீர் வடிகால் மராமத்து செடய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ 4500/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

குறிப்பு மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 121/06–07

4. இந்நகராட்சிக்கு சொந்தமான 19வது வார்டு பிரமுத்து சந்து தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மராமத்து செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ 4000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

குறிப்பு மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 127/06–07

5. இந்நகராட்சிக்கு சொந்தமான TN69- 4277 பவர் டில்லர் வாகனத்தின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுதுநீக்கப் பணிகள் செய்து மீண்டும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று பெற வேண்டும். இதற்கான செலவினத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 672 நாள் 22–5–2006ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 12–3–2007ல் அரசு அஙகீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1. மெசர்ஸ் ஆர்.என். ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ்
   சிதம்பரநகர், தூத்துக்குடி ... ரூ 16,500/–

2. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அண்ட்
   இஞ்சினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை, தூத்துக்குடி .. ரூ 19,670/–

3. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஷ் கால்டுவெல் காலனி,
   தூத்துக்குடி .. ரூ 20,630/–

<u>அலுவலகக் குறிப்பு</u>

வாகனம் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் வாகனம் ஆகும் சாலையில் இயக்க தகுதிச் சான்று அவசியம் என்பதால் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவன விலைப்புள்ளி ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் இ1. 337/07

6. இந்நகராட்சிப் பகுதி 43 வது வார்டு நீதிபதி குடியிருப்பில் பொது நிதியின் கீழ் குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிக்கு 18–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டிற்கு 0.11% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 2.69% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 77 நாள் 22–2–2007ல் ரூ 39,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.11% குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 171/06–07

7. இந்நகராட்சிப் பகுதி 13 வது வார்டு பூபாலராயர்புரம் (உறார்விபுரம் )பகுதியில் பொது நிதியின் கீழ் குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கும் பணிக்கு 18–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டிற்கு 0.39% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 6.19% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ரூ 62,000/–க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.39% குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 178/06–07

8. இந்நகராட்சிப் பகுதி சத்திரம் தெருவில் கல்யாண மண்டபத்தின் மாடிப் படியில் எவர்சில்வர் கைப்பிடி அமைக்கும் பணி பொது நிதியின் கீழ் அமைக்கும் பணிக்கு 20–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு வி. தஙகராஜ் | மதிப்பீட்டிற்கு 0.04% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு கே. வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு 0.09% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 156 நாள் 21–3–2007ல் ரூ 7,50,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.09% குறைவானதுமான திரு கே. வேலாயுதம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 184/06–07

9. இந்நகராட்சிப் பகுதி சத்திரம் தெரு கல்யாண மண்டபத்தில் முகப்பு தோற்றம் அமைக்கும் பணி பொது நிதியின் கீழ் செய்யும் பணிக்கு 20–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு வி. தஙகராஜ் | மதிப்பீட்டிற்கு 0.03% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு கே. வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு 0.07% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 159 நாள் 21–3–2007ல் ரூ 6,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.07% குறைவானதுமான திரு கே. வேலாயுதம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 185/06–07

10. இந்நகராட்சிப் பகுதி சத்திரம் தெரு கல்யாண மண்டபத்தில் பொது நிதியின் கீழ் நடைபாதை அமைக்கும் பணிக்கு 18–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு வி. தங்கராஜ் | மதிப்பீட்டிற்கு 0.06% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு கே. வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு 0.70% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 157 நாள் 21–3–2007ல் ரூ 10,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.70% குறைவானதுமான திரு கே. வேலாயுதம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 186/06–07

11. இந்நகராட்சிப் பகுதி சத்திரம் தெரு கல்யாண மண்டபத்தில் பொது நிதியின் கீழ் காம்பவுண்டு சுவர் கட்டும் பணிக்கு 18–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு கே. வேலாயுதம் | மதிப்பீட்டிற்கு 0.62% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு வி. தங்கராஜ் | மதிப்பீட்டிற்கு 0.48% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 158 நாள் 21–3–2007ல் ரூ 3,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.62% குறைவானதுமான திரு கே. வேலாயுதம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 187/06–07

12. இந்நகராட்சிப் பகுதி அண்ணாநகர் 22ம் தெரு முதல் டூவிபுரம் மேற்கு 10ம் தெரு வரை பொது நிதியின் கீழ் (குடிநீர் பராமரிப்புக்கு) குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணிக்கு 18–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு கே. வி. மாரியப்பன் | மதிப்பீட்டிற்கு<br>0.96% குறைவு | டேவணித்தொகை<br>செலுத்தியுள்ளார். |
| 2. திரு கே.சதா | மதிப்பீட்டிற்கு<br>7.42% குறைவு | டேவணித்தொகை<br>செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ரூ 2,80,000/–க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.96% குறைவானதுமான திரு கே. வி. மாரியப்பன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 203/06–07

13. இந்நகராட்சிப் சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தை பொது நிதியின் கீழ் பழுதுபார்க்கும் பணிக்கு 18–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எ.வேல்ச்சாமி | மதிப்பீட்டிற்கு<br>0.16% குறைவு | டேவணித்தொகை<br>செலுத்தியுள்ளார். |
| 2. திருமதி வி. கோமதி | மதிப்பீட்டிற்கு<br>0.10% குறைவு | டேவணித்தொகை<br>செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 1082 நாள் 29–12–2007ல் ரூ 50,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.16% குறைவானதுமான திரு எ. வேல்ச்சாமி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 108/06–07

14. இந்நகராட்சிப் சொந்தமான .புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தை பொது நிதியின் கீழ் பழுதுபார்க்கும் பணிக்கு 18–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திருமதி வி. கோமதி | மதிப்பீட்டிற்கு 0.75% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு எ.வேல்ச்சாமி | மதிப்பீட்டிற்கு 0.17% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 1083 நாள் 29–12–2007ல் ரூ 55,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.17% குறைவானதுமான திரு எ. வேல்ச்சாமி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 107/06–07

15. இந்நகராட்சி செவந்தாகுள. ரோட்டிலுள்ள நகராட்சி திருமண மண்டபத்தில் இயங்கி வரும் கருவூல கட்டிட மாடியில் Counter Room கட்டும் பணி மற்றும் கூடுதல் அறை பராமரிக்கும் பணி பொது நிதியின் கீழ் அமைக்கும் பணிக்கு 20–4–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0.30% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.96% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 336 நாள் 8–8–03ல் ரூ 4,75,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0.30% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 183/06–07

**16.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திரவியபுரம் 5வது தெருவில் மழைநீர்வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பிடு ரூ 2,20,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 6/07–08

17. இந்நகராட்சிப் பகுதியில் வழஙகப்படும் குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு குடிநீர்க் கட்டணம் வசூல் செய்ய மன்றம் 25–1–2007ம் தேதிய 11ம் எண் தீர்மானத்தின் ஒரு மனதாக தீர்மானித்துள்ளது.

| | |
|---|---|
| 1. குடித்தன உபயோகம் | 1000 லிட்டருக்கு ரூ 3.50 குறைந்த பட்ச கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ 50/– |
| 2. வியாபார உபயோகம் | 1000 லிட்டருக்கு ரூ 10.00 குறைந்த பட்ச கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ 100/– |
| 3. தொழிற்சாலை உபயோகம் | 1000 லிட்டருக்கு ரூ 15.00 குறைந்த பட்ச கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ 150/– |

மன்றத் தீர்மானப்படி மேலே கண்டவாறு குடிநீர்க் கட்டணம் வசூல் செய்வது தொடர்பாக இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு, சென்னை அவர்களின் மூலமாக 4–3–2007 அன்று தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டு பொதுமக்கள் தஙகள் மறுப்பு மற்றும் கருத்துக்களை 5–4–2007க்குள் நகராட்சி அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கோரப்பட்டது.

ஆனால் இப்பொருள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து 5–4–2007 வரை மறுப்பு மற்றும் கருத்துக்கள் எதுவும் வரப்பெறவில்லை. மேற்படி விபரம் மன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

குறிப்பு நகரமன்ற தீர்மானம் எண் 11 நாள் 25–1–2007ல் கண்டுள்ளபடி குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்து அரசிதழில் வெளியிடவும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினை நடைமுறைப்படுத்தி வசூல் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 467/06

18. இந்நகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு 2, பிளாக் 22, நகரளவு எண் 2879/2B, 2880/2ல் அமைந்துள்ள இராஜாஜி பூஙகாவில் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையை விரிவாக்கம் செய்ய 500 படுக்கைகள் கொண்ட வார்டு, வெளி நோயாளிகள் பகுதி, ஆய்வுக்கூடம் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடம் கட்டுவதற்கு 1. 98 ஏக்கர் நிலம் மருத்துவக் கல்லூரிக்கு வழஙக முதல்வர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை தூத்துக்குடி கோரியதின் பேரில் நகர்மன்றம் தீர்மானம் எண் 40 நாள் 27–4–2005ல் மேற்படி நிலத்தினை மருத்துவக் கல்லூரிக்கு வழஙக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நிலமாற்றம் செய்ய பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் முதல்வர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை தூத்துக்குடி அவர்களின் நகஎண் 9107/தி & வ/2004 நாள் 9/4/2007ம் தேதிய கடிதத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை விரிவாக்கம் செய்ய 500 படுக்கைகள் கொண்ட வார்டு வெளி நோயாளி பகுதி அவசர சிகிச்சை பிரிவு மற்றும் ஆய்வுக்கூடம் கட்டிடம் அரசு மருத்துவ மனை வளாக முன் பகுதியில் கட்டப்படவுள்ளதாகவும் மேற்படி மருத்துவ மனைக்கு பொதுமக்கள் வரும் பாதை மற்றும் வாகனம் நிறுத்துவதற்கு தேவையான 2922 ச.மீ (0. 72 ஏக்கர்) நிலத்தினை நகராட்சியின் இராஜாஜி பூஙகாவில் தரும்படியும், மேற்படி நிலத்தினை பொதுமக்கள் நலன் கருதி தானமாக வழஙகும்படியும் தானமாக வழஙகப்படுவதால் இராஜாஜி பூஙகாவில் உள்ள நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணி பாதிப்படையா வண்ணம் உரிய நிபந்தனைக்கு உட்படுவதாகவும் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் நிலம் கிரையம் மற்றும் நிலப் பயன்பாட்டிற்கு தேவையான தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும், மேற்படி நிலத்தினை தானமாக வழஙகவும் கோரியுள்ளார். ஆனால் அரசாணை (எம்எஸ்) எண் 730 ந.நி(ம) கு.வ.துறை நாள் 14–4–1976ன்படி நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை மாற்று பணிக்கு மாற்றம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாகம் (ம) கு.வ.(நநி) துறை அரசாணை எண் 25 நாள் 25–2–2000ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்குச் சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்திற்கு தேவையானாலும் அதனை அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் தான் கொடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி நகராட்சி ராஜாஜி பூஙகா இடமானது தமிழ்நாடு அரசு இதழில் பிரகடனம் செய்யப்பட்ட பூஙகாவாகும். எனவே உத்தேசிக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை புதிய கட்டிடத்திற்கு நகராட்சியின் இராஜாஜி பூஙகாவின் வழியாக செல்ல சாலை வசதி கோரும் இடத்தில் நகராட்சி பொது கட்டண கழிப்பறை ஒன்றும் தண்ணீர் விநியோகப் பணியாளர்கள் குடியிருப்புகள் நான்கு எண்ணமும் உள்ளது. மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை கட்டிடத்திற்கு செல்ல சாலை வசதிக்கான இடம் ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் திட்டமிடப்பட்டுள்ள அச்சாலையில் குறுக்கே உள்ள நகராட்சியின் கட்டண கழிப்பறை மற்றும் குடியிருப்புகள் அகற்றப்பட வேண்டிய நிலையில் நகராட்சி பொது கட்டண கழிப்பறை மற்றும் நான்கு பணியாளர்கள் குடியிருப்பு கட்டிடஙகளுக்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறையினரால் நிர்ணயிக்கப்படும் விலை விகிதத்தில் நஷ்ட ஈடும் கட்டண கழிப்பறை நகராட்சியால் ஏலம் விடப்பட்டுள்ளதால் நில மாற்றம் ஒப்புதல் அளிக்கப்படும் நாளில் குத்தகைதாரர் திரும்ப செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் மேற்படி

ஏலத்தொகையும் சேர்த்து கணக்கிட்டு மொத்த தொகையினை ஈடாக வழஙக கேட்டுக்கொள்ளலாம். மேலும் பூஙகாவின் சுற்றுப்புறச்சுவர் இடிக்கப்படுவதால் நகர்ப் பகுதிக்கு குடிநீர் வழஙகும் இடமான இராஜாஜி பூஙகா பாதுகாப்பு கருதியும் முதல்வர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை தூத்துக்குடி அவர்களது சொந்த செலவில் புதிதாக சுற்றுச்சுவர் அமைத்து தரக்கோரியும் சாலை அமைக்கப்படும் பொழுது குடிநீர்க் குழாய்கள் பாதிப்பு ஏற்படா வண்ணம் சாலை அமைக்கவும் பிற்காலத்தில் குடிநீர்க் குழாயில் ஏற்படும் பழுதுகள் சீர் செய்யவோ அல்லது மாறுதல் செய்யவோ எவ்வித இடையூறும் விளைவிக்கக்கூடாது எனவும் ஆட்சேபணைகள் தெரிவிக்கக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு சாலை அமைத்துக்கொள்ள இட ஒதுக்கீடு செய்ய அரசின் அனுமதி பெற்று உரிய ஆணைகள் பெறவும் பிரேரணைகள் அனுப்பலாம்.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. அரசின் அனுமதி பெற்று இராஜாஜி பூஙகாவிலுள்ள இடத்தை உரிய நஷ்ட ஈடு பெற்றுக்கொண்டு வழஙக அனுமதிக்கலாம்.

2. இராஜாஜி பூஙகா தமிழ்நாடு பூஙகாக்கள் மற்றும் திறவிட சட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டு அஙகீகரிக்கப்பட்ட பூஙகா என்பதால் பொருளில் குறிப்பிட்டுள்ள இடத்தை சாலை அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிலப் பரப்பினை அறிவிக்கையிலிருந்து நீக்கம் செய்ய நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களின் அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1. 5153/05

19. இந்நகராட்சி பீச் ரோட்டில் சர்வே வார்டு எண் 1, பிளாக் 7, புல எண் 1112/2ஏல்98 ச.மீட்டர் பரப்பில் (1055 ச. அடியில்) இடிந்த நிலையில் நகராட்சிக்கு சொந்தமான சத்துணவுக்கூடம் கட்டிடம் உள்ளது. இந்த சத்துணவுக்கூடம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு செயல்பட்டு வந்தது. தற்போது மேற்படி சத்துணவு மையத்திற்கு குழந்தைகள் சரியாக வராததால் சத்துணவுக்கூடம் அருகிலுள்ள மையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்படி சத்துணவுக்கூடம் இடிந்த நிலையில் உள்ளதாலும். மேற்படி இடத்தில் வேறு தனி நபர் யாரேனும் ஆக்கிரமிப்பு செய்யா வண்ணம் தடுத்திடவும் நகராட்சிக்கு வருமானத்தை உருவாக்கவும் இடிந்த நிலையில் உள்ள மேற்படி சத்துணவு கூட கட்டிடத்தை அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் புதிதாக கடைகள் கட்டி குத்தகை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> அனுமதிக்கலாம்.

ஜி1. 7373/07

20. இந்நகராட்சி அலுவலக பொது சுகாதாரப் பணிகள் குடிநீர்ப் பணிகள் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மற்றும் ஆய்வுக் பணிகள் பொது மக்களிடம் இருந்து பெறப்படும் புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், பொதுமக்களின் சேவையை துரிதப்படுத்திடவும் நகர்மன்ற தலைவர், ஆணையர், பொறியர், முதுநிலை நகரமைப்பு அலுவலர் நகர் நல அலுவலர், இளநிலைப்பொறியாளர்கள் மின் கண்காணிப்பாளர்கள் ,

நகரமைப்பு ஆய்வர்கள், குழாய் ஆய்வர்கள் துப்புரவு ஆய்வர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வர்கள் ஆகியோர்களுக்கு நகராட்சி மூலம் Cell to Cell குரூப் டயலிங் முறையில் புதிதாக Sim Card வாஙகவும், துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு மட்டும் Cell Phone னும் வாஙகிடவும் ஆகும் உத்தேச செலவு ரூ 56,000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** விலைப்புள்ளிகள் பெற்று சிக்கனத்திட்டத்தில் Sim Card மற்றும் செல்போன் வாஙகி அனைவருக்கும் அளித்திட மன்றம் அனுமதிக்கலாம்.

சி1. 2432/07

21. இந்நகராட்சியின் வருவாய் நிதி, குடிநீர் வழஙகல் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிகளுக்கான 2006–07ம் ஆண்டு திருத்திய வரவு செலவு மதிப்பீடும் மற்றும் 2007–08ஆம் ஆண்டிற்குரிய உத்தேச வரவு செலவு மதிப்பீடும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

எப்1. 919/2006

## 22. நகரமன்றத் தலைவர் அவர்களின் கோரிக்கை

இன்று (27. 4. 2007) நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர் திரு எம். ஜெயக்குமார் 2007–08 ஆண்டிற்கான தூத்துக்குடி நகராட்சி பட்ஜெட் நகலினை நகர்மன்ற கூட்டரஙகில் கிழித்தெறிந்து கூட்டரஙகை விட்டு வெளியேறி விட்டார். பாரம்பரியமான மன்றக் கூட்டத்தை சீராக நடத்தவிடாமல் கூட்ட நடவடிக்கைகளுக்கு புறம்பாக நடந்து கொண்டும் மற்றும் இதர நகர்மன்ற உறுப்பினர்களிடையே தேவையற்ற பதட்டத்தை ஏற்படுத்தியதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 25–ல் தெரிவிக்கப்பட்ட நகர்மன்ற தலைவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்படி நகர்மன்ற உறுப்பினரை அடுத்துவரும் இரண்டு நகர்மன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருக்க தற்காலிகமாக நிறுத்தி வைக்க மன்றம் தீர்மானிக்க,

நகர்மன்றம், தூத்துக்குடி
நாள் 25–4–2007

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி

**தூத்துக்குடி நகர்மன்றத்தின் 27–4–2007 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் நடவடிக்கை எடுகுறிப்பு**

| வரிசை எண் | தீர்மானம் எண் | தீர்மானம் விபரம் |
|---|---|---|
| 1 | 269 | அலுவலகக் குறிப்புப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 2 | 270 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது |
| 3 | 271 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது |
| 4 | 272 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது |
| 5 | 273 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது |
| 6 | 274 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 7 | 275 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 8 | 276 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 9 | 277 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 10 | 278 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 11 | 279 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 12 | 280 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 13 | 281 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 14 | 282 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 15 | 283 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 16 | 284 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது |
| 17 | 285 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| 18 | 286 | அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| 19 | 287 | அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| 20 | 288 | விலைப்புள்ளிகள் பெற்று சிக்கனத்திட்டத்தில் சிம்கார்டு (Sim card) மற்றும் செல் போன் வாஙகவும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு வழஙகப்படும் செல் போன்களுக்கான தொகையினை அவர்களது மாத ஊதியத்தில் தவணை முறையில் பிடித்தம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. |
| 21 | 289 | அலுவலக குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 22 | 290 | நகர்மன்ற தலைவர் அவர்களின் கோரிக்கையை 34 மன்ற உறுப்பினர்களின் ஆதரவோடும், எனது ஆதரவோடும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. |

நகரமன்றத் தலைவர்,
தூத்துக்குடி நகராட்சி.